***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தாறு முதல் தொண்ணூற்றொன்று வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-05

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் எண்பதாவது முதல் எண்பத்து மூன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், குழுவின் தலைவர்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது முதல் ஆறாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சிக் காவல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிக் காவல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.